DINAKARAN

27 SEP 2022

PAGE 15

தினகரன் புதுவை

புதுவை பல்கலை சமுதாய கல்லூரியில்

# மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

புதுச்சேரி, செப். 27: புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

லாஸ்பேட்டையில் உள்ள புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் சமுதாய கல்லூரியில் இந்த கல்வி ஆண்டிற்கான இளங்கலை, முதுகலை, முதுநிலை பட்டயம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு செப்டம்பர் 25ம் தேதி வரை சமுதாய கல்லூரியின் இணையதளமான *http://pucc.edu.in* மூலம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு வந்தன.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசி தேதி நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த நிலையில் பெரும்பாலான மாணவர்களின் கோரிக்கையை ஏற்று வரும் 30ம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் முதுகலை யோகா படிப்பிற்கு ஏதாவதொரு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சியும், இளங்கலை பட்டப்படிப்புகள், பட்டயப்படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் சேர்வதற்கு 12ம் வகுப்பில் தேர்ச்சியும், முதுநிலை பட்டயப் படிப்புகளில் சேர்வதற்கு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்கள் அறிவதற்கு இக்கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINAMALAR

27 SEP 2022

PAGE 1

# சமுதாயக் கல்லூரிக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

**புதுச்சேரி, செப். 27–** புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாயக் கல்லூரியில் இளங்கலை, முதுகலை மற்றும் பட்டய படிப்புகளில் சேர, வரும் 30ம் தேதி வரை விண்ணப்பிக்க கால அவகாசம் அளிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாயக் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:



லாஸ்பேட்டையில், புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சமுதாயக் கல்லூரியில் இந்தாண்டு இளங்கலை, முதுகலை, முதுநிலை பட்டயம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு நேற்று முன்தினம் வரை இணையதளம் http://pucc.edu.in மூலம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது.

இறுதி தேதி முடிந்த நிலையில், மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, வரும் 30ம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப் பட்டுள்ளது.

இங்கு, முதுகலை யோகா படிப்பிற்கு, ஏதாவது ஒரு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இளங்கலை, பட்டயம், சான்றிதழ் படிப்புகளில் சேர பிளஸ் 2 தேர்ச்சி பெற வேண்டும். முதுநிலை பட்டய படிப்புகளில் சேர இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இந்த கல்லூரியில் பயில விரும்புவோர், இணையதளம் http://pucc.edu.in மூலம் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர், லாஸ்பேட்டை, சமுதாய கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.